**கவனிக்க.-** *19.06.2020 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2182 - 2020 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26**

*2182 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 30 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

29 - B 082033 - 353 (2020/06)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

(கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

ஹட்டன் நஷனல் பேங்க் லிமிடெட் எனும் பெயரில் அழைக்கப்படும் ஹட்டன் நஷனல் பேங்க் பீஎல்சீ, இல. 479, டீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 மற்றும் கொழும்பு 10, மாளிகாவத்தை செயலாளர் அலுவலகத்தில் தனது கிளை அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

வழக்காளி.

வழக்கு இல. :
C. H. C. 28/17/MR
தன்மை : அடகு
பெறுமதி :
ரூ. 14,000,000
எஸ்கீஸி இல. :
16/2020

எதிர்

1. முசின் மொஹமட் அப்துல்லா
2. ஜெய்நுதின் மொஹமட் பர்ஷாட்
3. மொஹ்முட் தரீக் மொஹமட் (அனைவரும் கொழும்பு 09, தெமட்ட கொடை வீதி, இல. 252/7 எனும் இடத்தில் நைன் ஸ்டார்ஸ் எனும் பெயரில் மற்றும் தலைப்பின் கீழ் கூட்டு வர்த்தகமொன்றை நடாத்துகின்றனர்.)
4. ஹமீட் புஹாரி பவுசுல் ஹினாயா அல்லது பவசில் ஹினாயா, இல. 17, புவிலிங்கம் பிளேஸ், கொழும்பு 08

எதிராளிகள்.

மேற்குறிப்பிட்ட இலக்கம் கொண்ட வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட விற்பனை அதிகாரப் பத்திரத்திற்கு அமைய வழக்காளி வங்கிக்கு மேற்குறிப்பிட்ட எதிராளிகளால் நடாத்தப்பட்டு வரும் நைன் ஸ்டோர்ஸ் எனும் பெயரிலுள்ள வர்த்தக நிலையத்தினை நடாத்திச் செல்லும் முசின் மொஹமட் அப்துல்லா, ஜெய்நுதின் மொஹமட் ஷர்பாஸ், மொஹ்முட் தரிக் மொஹமட், ஹமீட் புஹாரி பவுசுல் ஹினாயா என்பவர்களால் வழக்காளி வங்கிக்குப் பொதுவான தீர்ப்புக் கட்டளைக்கு அமைய செலுத்த வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ள ரூ. 9,613,868.92 தொகை மற்றும் அதன் பொருட்டு 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட முழுத்தொகையைச் செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 12% வட்டியும், ரூ. 3,422,958.91 தொகை பொருட்டு 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்புக் கட்டளைத் திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்புக் கட்டளை முழுத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 12% வட்டியும் மற்றும் ரூ. 933,879.46 தொகை மற்றும் அதன் பொருட்டு 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்பிடப்பட்ட முழுத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 12% வட்டியும் செலுத்துவதற்கு தவறவிட்டுள்ளபடியால் கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள்.

2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு எதிராளியினுடைய ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிஸ்கல் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

குறித்த ஏல விற்பனையில் உயர்ந்தபட்சத்தை அடைந்தவர் கொள்வனவாளராவதுடன் ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேச கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள்படி அரசாங்க கட்டணங்களும், விற்பனைத் தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரரின் தரகுப் பணமும், உள்ளூராட்சி சபைக் கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழுச் செலவுகளும் ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவ் வழக்குக்கு பற்றாக குறித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

ஆதனம் அமைந்துள்ள இடத்திற்குச் செல்லும் வழி.- பொரளை முச்சந்தியில் இருந்து மருதானை பாதைக்கு முன்னோக்கிச் சென்று வலது பக்கம் அமைந்துள்ள மக்கள் வங்கி கட்டிடத்திற்கு அருகில் அமைந்துள்ள புவலிங்கம் பிளேஸ் எனும் பாதையில் சில மீற்றர் தூரம் முன்னோக்கிச் செல்கையில் இடது பக்கத்தில் இந்த வரி மதிப்பீட்டு இல. 17 கொண்ட வீடு அமைந்துள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் மற்றும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிற்குள் பொரளை தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இல. 35 எனும் பொரளை தெற்கில் அமைந்துள்ள புவிலிங்கம் பிளேஸில் வரிமதிப்பீட்டு இல. 17 கொண்டதும் உத்தியோகபூர்வ நில அளவையாளர் ஏ. எப். சமீர் என்பவரினால் 1972.11.15 ஆந் திகதி வரைந்து தயாரிக்கப்பட்ட இல. 1469 ஐக் கொண்ட வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் (துண்டு) A 10 எனும் காணித்துண்டிற்கான எல்லைகளாவன- வடக்கு : லொட் A 13 ; கிழக்கு : லொட் A 13 ; தெற்கு : புவிலிங்கம் பிளேஸில் அமைந்துள்ள (லொட் A 25) ; மற்றும் மேற்கு : லொட் A 9 எல்லைகள் கொண்டதும் 1469 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இரண்டு தசம் இரண்டு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.20பே.) விசாலமும் கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ளதான கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும் உட்பட்டதும் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் காணிப்பதிவகத்தில் ஈ 74/102 எனும் பதிவேட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த இல. 5264 எனும் அடகு பிணையுறுதியின் இரண்டாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வழியுரிமை உரித்து மற்றும் ஏனைய பொது வசதிகளும் உட்படவாகும்.

பதிவாளர்/பிரதி பிஸ்கல்.

வர்த்தக மேல் நீதிமன்றம்,
கொழும்பு 12,
2020, யூன் 10.

06-225

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.